மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரை முருகன் என்று வைக்கலாமா அல்லது திருமுருகன் என்று வைக்கலாமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: துரை முருகனை, திருமுருகன் என்று மாற்றிக்கொள்வதிலே ஆட்சேபணையில்லை.

திருமதி. த. ந. அனந்தநாயகி: பழனிக் கோயிலிலே ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று சொல்லமுடியுமா? அதிலே எந்த அளவுக்கு அந்தக் கல்லூரிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அதைப் பற்றிக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

K. M. SUBRAMANIAM: Sir, is it not fact that.

'Muruga' has two wives one from Draveha Nadu and one from Arya Nadu and may I know whether He is surely a Tamil–God —Arya God?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, மேடையிலே பிரிவினைப்பற்றி அடிக்கடி பேசுகிறார்கள், கடவுளிடத்திலே பிரிவினை வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய கோயில்களிலே பழனியிலே உண்டியல் மூலமாக—மற்ற முறைகளிலே வருகின்ற வருமானங்கள் பற்றிய விவரங்கள் இல்லையென்றாலும், உண்டியல் மூலமாக வருகிற வருமானத்தையாவது தெரிவிக்கமுடியுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தனியாகக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தம்முடைய இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.